185

...by the Text-Book Committee as suitable
for school use.

185

பாப்பாப் பாட்டு

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரால்
பாடப்பெற்றது.

OFFICE ... MADRAS
25 OCT 1941

(All rights reserved.)

-வது பதிப்பு] 1941 [விலை 0—0—3

894.811

பாப்பாப் பாட்டு

MADRAS

டி விளையாடு பாப்பா,—நீ
ந்திருக் லாகாது பாப்பா
டி விளையாடு பாப்பா,—ஒரு
ந்தையை வையாதே பாப்பா.

ன்னஞ் சிறு குருவி போலே—நீ
திரிந்து பறந்து வா பாப்பா,
ன்னப் பறவை களைக் கண்டு—நீ
திில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா.

த்தித் திரியு மந்தக் கோழி—அதைக்
டி விளையாடு பாப்பா,
த் திருடு மந்தக் காக்காய்—அதற்
படவேணும் பாப்பா.

பொழிந்து தரும்,பாப்பா,—அந்தப்
நல்லதடி பாப்பா;
நழைத்து வரும் நாய் தான்—
க்குத் தோழ னடி பாப்பா.

-வது பதிப்பு]

ரு. வண்டி யிழுக்கும் நல்ல குதிரை,—
வயலில் உழுது வரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு
ஆதரிக்க வேணு மடி பாப்பா.

சு. காலை யெழுந்த வுடன் படிப்பு—பின்
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா.

எ. பொய் சொல்லக்கூடாது பாப்பா—என்று
புறஞ் சொல்ல லாகாது பாப்பா,
தெய்வம் நமக்குத் துணை பாப்பா—ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா.

பாதகஞ் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங் கொள்ள லாகாது பாப்பா,
மோதி மிதித்து விடு பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா.

18

துன்பம் நெருங்கி வந்த போதும்—நாம்
சோர்ந்து விட லாகாது பாப்பா,
அன்பு மிகுந்த தெய்வ முண்டு—துன்பம்
அத்தனையும் போக்கி விடும் பாப்பா.

கூ. சோம்பல் மிகக் கெடுதி பாப்பா,—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா,
தேம்பி யழுங் குழந்தை நொண்டி,—நீ
திடங்கொண்டு போராடு பாப்பா.

தமிழ்த் திரு நாடு தன்னைப் பெற்ற-எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா,
அமிழ்தில் இனியதடி பாப்பா,—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

கஉ. சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே,—
தொழுது படித்திடடி பாப்பா! [அதைத்
செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம்—
தினமும் புகழ்ந்திடடி பாப்பா. [அதைத்

கங. வடக்கில் இமயமலை பாப்பா—தெற்கில்
வாழுங் குமரி முனை பாப்பா,
கிடக்கும் பெரிய கடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா.

கச. வேதமுடைய திந்த நாடு,—நல்ல
வீரர் பிறந்த திந்த நாடு,
சேத மில்லாத ஹிந்துஸ்தானம்—இதைத்
தெய்வ மென்று கும்பிடடி பாப்பா.

கரு. சாதிகள் இல்லையடி பாப்பா ;—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் ;
நீதி, உயர்ந்த மதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

கசு. உயிர்களிடத்தில் அன்பு வேணும் ;—
தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேணும் ;
வயிர முடைய நெஞ்சு வேணும் ;—இது
வாழும் முறைமை யடி பாப்பா.

———

பாரதி நூல்கள்

நேர்த்தியான காலிகோ பைண்டு

(LIBRARY EDITION)

கவிதைகள். தேசிய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், விநாயகர் நான்மணி மாலை, கண்ணன் பாட்டு, புதிய ஆத்திசூடி, பாப்பாப் பாட்டு, முரசு, பாரதி அறுபத்தாறு, காட்சி, குயில், பாஞ்சாலி சபதம் முதலியன. ரு. 2—12—0

வசனங்கள். இதில் ஞானரதம், சந்திரிகையின் கதை, நவதந்திரம், பதஞ்சலி யோகஸூத்ரம், வேத ரிஷிகளின் கவிதை, தராசு முதலியன அடங்கியுள்ளன. ரு. 2—12—0

கட்டுரைகள். தத்துவம், மாதர், கலைகள், சமூகம் அடங்கியுள்ளன. ரு. 2—12—0

பகவத்கீதை. நாகர அக்ஷரத்தில் மூலமும், பாரதியார் எழுதிய அழகிய தமிழ் உரையும் அடங்கியது.

பாகெட் சைஸ் (காலிகோ)	அணு	0—8—0
,, (ராப்பர்)	,,	0—6—0

பாரதியாரும் அவர் நூல்களும்

(BHARATI & HIS WORKS)

ஸ்ரீ ஸி. விசுவநாதன், பி. ஏ., எல். டி., யால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அரிய நூல்.

விலை அணு [illegible]—0

பா[illegible] தி[illegible] [illegible]ாலயம்,

567, ஹைரோடு, [illegible]

Hindi Prachar Press, Thyagarayana[illegible]